
# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலேசெயர் 3 : 16

மரம் 1 அக்டோபர் 2000 கனி 3

ஆசிரியர்
B. அர்ஜுனன்

*படிப்போம் கிறிஸ்துவின் வசனம் !*   *செல்வோம் பரலோகம் !!*

## ஆசிரியர் கடிதம்

*வாசகர்களுக்கு,*

தமிழகத்தில் மாவட்டவாரியாக நமது 'The Word of Christ'மாத இதழ் பற்றிய கருத்தரங்கமும் அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷ கூட்டமும் நடத்த திட்டமிட்டு உள்ளோம்.

இதற்கு ஒத்துழைப்புத் தரக்கூடிய வாசகர்கள் தேவை. உங்கள் மாவட்டத்தில் நீங்கள் இருக்குமிடம் மற்றும் பஸ்வழி தடம் உட்பட அனைத்து விபரங்களுடன் கடிதம் அல்லது போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

*"நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கேயென்று போதகர் கேட்கிறார்."* *(மாற்கு 14 : 14)*

நீங்கள் இடம் கொடுப்பீர்களா ?

தொடர்புக்கு :
**B. Arjunan**, Editor
P.O. Box : 5, Batlagundu 624202.
Dindigul Dist, Tamilnadu, India. ✆ : 04543 - 23278

*அன்புடன்*
ஆசிரியர்

**இதழின் உள்ளே . . .**   **பக்கம்**

1. நீங்கள் ஆயத்தமா? 1
2. தேவன் மேல் பழி சுமத்துவது ஏன்? 5
3. தெரிந்து கொள்ளுங்கள் 9
4. கிறிஸ்து நமக்காக மன்றாடுகிறார் 10
5. பெண்கள் பகுதி 13
6. ஒரு வழி பாடம் 14
7. தானியேலின் பக்தி (சிறுவர் பகுதி) 16
8. திருமணமும் குடும்ப வாழ்க்கையும் 18
9. படங்களும், சுருக்கமான வர்ணணைகளும் 19
10. புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் 20
11. நடப்பு செய்திகள்

FOR FREE DISTRIBUTION

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
POST BOX No. 5, Batlagundu - 624 202. SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 அக்டோபர் 2000 கனி 3

ஆசிரியருரை



# நீங்கள் ஆயத்தமா?

## Are you Ready?

நீங்கள் ஆயத்தமா? என்று கேட்டால் நீங்கள் எதற்கு என்று கேட்பீர்கள். நாம் அநேக காரியங்களுக்காக ஆயத்தமாக இருக்கின்றோம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாயிருக் கின்றோமா? நீங்கள் நினைக்கலாம் இயேசுவின் வருகைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் அவர் வருகிறார், வருகிறார் என்று அநேக காலமாக பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள் எங்கே! அவர் வந்தார். இன்று வரை அவர் வரவில்லை அவர் வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியமாகயிருக்கலாம்.

இச்செய்தியை வாசிக்கும் அன்பான சகோதரனே சகோதரியே பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு எழுதின புத்தகத்தில் 25ம் அதிகாரம் 1 முதல் 13 வரையுள்ள வசனங்களைப் படிக்கும் போது 10 கன்னிகைகளைப் பற்றிய உவமையின் மூலம் கர்த்தர் தம் வருகையை விளக்குகிறார். "ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும் ஐந்து பேர் புத்தியில்லாதவர் களுமாயிருந்தார்கள் . . . மணவாளன் வரத்தாமதித்த போது அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கி விட்டார்கள். நடுராத்திரியிலே இதோ, மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று அப்பொழுது அந்த கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி : உங்கள் என்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி நீங்கள் விற்கிறவர்களிடத்தில் போய் உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள் அப்படியே அவர்கள் வாங்கப் போன போது மணவாளன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு கூடக் கலியாண

வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள் அதற்கு அவர் : உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார், மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக் கிறபடியால் விழித்திருங்கள்" என்றார்.

கர்த்தருடைய வருகையின் நாளினை நாம் ஒருவரும் அறியோம். ஆனால் அவர் ஒரு நாள் நிச்சயமாக வருவார் என்று விசுவாசிக்கின்றோம். அவருடைய வருகையில் நாம் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படும் படியாக, மேற்கண்ட உவமையில் பார்த்தபடி புத்தியுள்ள கன்னிகைகளைப் போல ஆண்டவருடைய வருகையை எதிர்நோக்கி ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர்கள் எண்ணெய்யோடு கூட ஆயத்தமாக இருந்தபடியால் மணவாளனோடு கூட பிரவேசித்தார்கள். அதுபோல இப்புவியில் வாழ்கின்ற நாம் வேதமே வெளிச்சம் (நீதி. 6:23) என்ற வசனப்படி சகல நாளும் வேதத்தின் வெளிச்சத்திலே நடக்க வேண்டும். எல்லோரும் சபைக்குப் போவது போல நீங்களும் ஒரு வேதாகமத்தை எடுத்துக்கொண்டு போகலாம். ஆனால் அந்த வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்களா? ஆமாம் ஜெபிக்கின்றேன், பாடுகின்றேன், வசனம் கேட்கின்றேன், காணிக்கை கொடுக்கின்றேன் என்றெல்லாம் நீங்கள் சொல்லலாம். பரிசுத்த வேதாகமம் போதிக்கிறபடி நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இருக்கிறீர்களா? அல்லது பாவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? சற்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் புத்தியற்ற கன்னிகளைப் போல அவர் வரும்போது ஐயோ? நான் ஆயத்தமாக இல்லையே நான் நாளை ஞானஸ்நானம் பெறலாம் என்று இருந்தேனே அவரோ! இன்றே வந்து விட்டாரே. பாவத்தை இவ்வருடத்தோடு விட்டு விட்டு புது வருடத்தில் புதிய ஜீவியம் செய்ய வேண்டுமென்றிருந்தேனே அவரோ! இவ்வருடமே வந்து விட்டாரே, ஆண்டவரே, ஆண்டவரே என்று அந்த ஐந்து புத்தியற்ற கன்னிகைகளைப் போல கூப்பிட்டாலும் ஆண்டவர் உங்களை அறியேன் என்று சொல்லிவிடுவார். ஆகையால் காலம் தாழ்த்தாது ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.

கர்த்தர் ஒருமுறை ஆபிரகாமைப் பார்த்து, "உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார் ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேனங்கட்டி தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான்" என்று (ஆதி. 22:2-3) வசனங்களில்

வாசிக்கின்றோம். எப்படிப்பட்ட கீழ்படிதல் பார்த்தீர்களா? கர்த்தர் சொன்ன மறுநாள் அதிகாலையிலே அனைத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு தாமதமில்லாமல் புறப்பட்டு சென்றான். இன்றைய நாட்களில் ஜீவிக்கின்ற நமக்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. நாம் ஒரு இடத்திற்கு செல்லவேண்டுமானால் பலவிதமான சாக்கு போக்குகளை சொல்லுகிறோம், ஒன்று அந்த இடம் சரியில்லை என்போம் அல்லது என் மனைவியையோ, பிள்ளைகளையோ, தாய் தகப்பனையோ என்னால் விட்டு இருக்க முடியாது என்போம் ஆனால் ஆபிரகாமோ அப்படி ஒன்றும் சொல்லாமல் கர்த்தருடைய வார்த்தையின்படியே சகலத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு பலியிடும்படி மலைக்குச் சென்றான். புது உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்" (எபே.6:15) என்ற வார்த்தையின்படி எப்பொழுதும் சமாதானத்தின் சுவிசேஷத்தை செல்லும் இடங்களிலெல்லாம் அறிவிக்கிறவர்களாக காணப்பட வேண்டும்.

ஈசாக்கை பலியிட தகன்பலிக்கு வேண்டிய கட்டைகளை பிளந்து கொண்டு ஆயத்தத்துடன் சென்ற ஆபிரகாமைப் போல முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சில ஸ்திரீகள் இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்கு வேண்டிய கந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தப் படுத்தி ஓய்வு நாளில் ஓய்ந்திருந்து வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்த வர்க்கங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு கல்லறையினிடத்தில் சென்றார்கள். இந்த ஸ்திரீகள் ஆண்டவருடைய கல்லறையை வாசனைதிரவியங்களால் நிரப்பவும் அதை பாதுகாக்கவும் அவர்கள் எடுத்துக்கொண்ட ஆயத்தப்பணி எவ்வளவு சிறப்பானது பார்த்தீர்களா? நாமும் இந்த ஆபிரகாமைப்போலவும், முதல் நூற்றாண்டு ஸ்திரீகளைப்போலவும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டாமா? அவருடைய சரீரமான சபையை அழகுபடுத்தி சகல பரிசுத்தவான்களோடும் எதிர்பார்ப்போடும் இருக்க வேண்டாமா? பேதுரு குறிப்பிடுவதுபோல "நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" (I பேது.1:13). "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (கலா. 3:6) என்ற வசனப்படி நாமும் நம்முடைய விசுவாசத்தை கிறிஸ்துவின் மேல் பூரணமாக வைத்து அவருடைய இரண்டாம் வருகையை எதிர்பார்த்து ஆயத்தமாக காத்திருக்கும்போது அவரோடு நித்தியத்தில் பிரவேசிப்போம். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (I பேது.1 :7)

கர்த்தருடைய வருகையானது மனிதன் நினையாத வேளையாயிருக்கும்: ஆகையால் தான் பவுல் தெசலோனிக்கே சபைக்கு எழுதும் போது "இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள் ... ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" (I தெச. 5:2-6) என்கிறார். ஆவிக்குரிய வளர்ச்சியில்லாமல் தூங்குகிறவர்களையே இங்கு மற்றவர்கள் தூங்குகிறது போல என்று குறிப்பிடுகிறார். நான் பிரசங்கிக்கும் பிராந்திய சபையிலும் ஒரு சிலர் எப்பொழுது ஆராதனைக்கு வந்தாலும் தூங்கிக் கொண்டே இருப்பார்கள். என்ன சகோதரரே இப்படி சபையில் தூங்குகிறீர்கள் என்று கேட்டால் சபைக்கு வந்தவுடன்தான் இப்படி எனக்கு தூக்கம் வருகிறது என்பார்கள். இவர்களுக்கு தேவனை ஆராதிப்பதில் உற்சாகமில்லை என்றே சொல்லலாம். நாளைக்கு நாமெல்லாரும் அமெரிக்கா போகப் போகிறோம் என்று சொன்னால், எல்லோரும் உற்சாகமடைவார்கள். காரணம் அமெரிக்காவை நினைத்து ஒரு சந்தோஷம். இப்பொழுது எங்கே போனது தூக்கம். தேவ வார்த்தையை நன்கு கவனியுங்கள் "தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்" (எபி. 6:7) தேவ தாசர்கள் மூலம் அவ்வப்போது தேவ வார்த்தைகளைப் பெற்று அவர்கள் சந்தோஷப்படும்படி ஆவிக்குரிய வளர்ச்சியடையும் போது தேவனால் ஆசீர்வாதம் பெற முடியும்.

சிலர் கர்த்தருடைய வருகையைக் குறித்து பேசும் போது "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள் (II பேது. 3:4) ஏனென்றால் துன்மார்க்கன் செழித்துப்போகிறான் நீதிமான் புறம்பே தள்ளப்படுகிறான். அநேக சபைகள் இருந்த இடங்கூட இல்லாமல் போயிற்று, இயற்கைக்கு மாறான ஒரு மாற்றத்தையும் காணவில்லை ஆனால் இயேசு மீண்டும் வரப்போகிறார் என்று பிரசங்கிக்கிறார்களே என்று பேசக்கூடும் "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும் வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும் (லூக். 16:17). "இதோ, சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன் அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை" (வெளி. 3:11, 12) நமக்குள்ள விசுவாசத்தை நாம் காத்துக் கொண்டு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும். தேவதூதனே வந்து கிறிஸ்துவின் வருகைக்கு விரோதமான வார்த்தைகளை சொன்னாலும் அதை நம்பாது, தவறான உபதேசங்களுக்கு செவிகொடாமல் அவைகளை மேற்கொண்டு

சத்தியத்திலே உறுதியுள்ளவர்களாக இருக்கும்போது நாம் கிறிஸ்துமூலமாய் தேவனுடைய நித்திய ராஜ்ஜியத்தில் யாராலும் அசைக்கமுடியாத ஒரு தூணைப்போல நிலை நிற்போம், "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான், நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" *(வெளி. 21:7)*

என் அன்பு சகோதரனே, சகோதரியே இன்று நீ கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக இருக்கின்றாயா? அல்லது உலக வாழ்க்கைக்கு உன்னை ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாயா? நீ ஆயத்தப்படுத்தும் அநித்தியமான ஒன்றும் நித்தியத்துக்குள்ளே பிரவேசிப்பதில்லை என்பதை நன்கு அறிந்துகொள். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் ஆகையால் மண்ணுக்கே திரும்புவான் ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்குத் திரும்பும். "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்பேர்ப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" (II பேது. 3:11). மேலும் "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"(எபி. 12:14) ஆகையால் நாமெல்லாரும் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைய முயற்சி செய்து, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்தவர்களாயிருந்து கொண்டு தேவனுடைய சித்தத்தை ஒவ்வொருநாளும் நிறைவேற்றவேண்டும். நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள். கர்த்தர் தாமே உங்களை கிறிஸ்துவின் வருகைக்கு நேராக வழி நடத்துவாராக.

---

# தேவன் மேல் பழி சுமத்துவது ஏன்?

# Why Blame God?

***J.C. Choate***



மனிதனுக்கு, ஏற்படும் சகல காரியங்களுக்கும் குறிப்பாக அவை அவனுக்குச் சாதகமாக இல்லாத போது, யார் மீதாவது பழி சுமத்துவது அவனது சுபாவம். யுத்தங்கள், அழிவுகள், குடும்பங்களில் நிகழும் மரணங்கள் போன்ற பெரிய காரியங்கள் நடக்கும் போது பொதுவாக அவன் பழி சுமத்துவது தேவன் பேரில்.

எடுத்துக்காட்டாக, கடந்த இரண்டு உலக யுத்தங்களும் நடைபெற தேவன் ஏன் அனுமதித்தார் என்று பலர் கேட்டிருக்கிறார்கள்.

பலர் தங்கள் வாழ்வை இழந்தனர், உலகின் பல பகுதிகள் அழிக்கப்பட்டன. கடந்த மாபெரும் யுத்தமானது, பயங்கரமான பெரும் அழிவைக் கொண்டு வந்தது. இவை அனைத்துக்கும் மேலாக, கொடிய மனித சக்தியும், பணமும் விரையமாக்கப்பட்டன. அவை சிறப்பான பிற காரியங்களுக்கு பயன்பட்டிருக்கக் கூடும். எனவே, அவை அனைத்தும் நடைபெற ஏன் தேவன் அனுமதித்தார்? அவர் அதைத் தடுத்திருக்க முடியாதா! இப்போது நாம் விரும்பாத இந்த காரியங்களைப் பற்றி தேவனிடம் கேள்வி கேட்கும் வேளையில், நாம் எதைச் செய்ய விரும்புகிறோமோ அதைச் செய்ய தேவன் நமக்கு சுதந்திரத்தை தரவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். சில காரியங்களை நாம் செய்யாமலிருப்பது நமக்கு நல்லது என அவர் கண்டு, அதை நாம் செய்வதிலிருந்து நம்மைத் தடுக்க அவர் வந்தால், நாம் அதை எவ்வாறு விரும்புவோம்.

உண்மை என்ன வென்றால், அந்த யுத்தங்களுக்கோ அல்லது நடைபெறும் வேறு எந்த யுத்தங்களுக்கோ தேவன் பொறுப்பல்ல. அவை அனைத்தும் மனிதனுடைய செயல்கள். இப்படிப்பட்ட யுத்தங்கள் நடைபெறுவது தேவனின் சித்தம் அல்ல என்றாலும், மனிதன் எதை விரும்புகிறானோ அதைச் செய்யும் சுதந்திரத்தை அவனுக்கு அவர் அளித்திருக்கிறார்.

ஏதேன் தோட்டத்தில், விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதிலிருந்து ஆதாமையும், ஏவாளையும் தேவன் தடுத்திருக்க முடியும். ஆனால் அவ்வாறு அவர் செய்திருந்தால், அவர்கள் பொம்மைகளை போலவும், அடிமைகளாகவும், இயந்திர மனிதர்களாகவும் தான் இருந்திருப்பர், விரும்புவதைத் தேர்ந்தெடுக்கக் கூடிய அவர்கள் சுதந்திரம் மறுக்கப்பட்டிருக்கும், தமது விருப்பத்தைச் செய்ய அவர்களைக் கட்டாயப்படுத்துவது தேவனுடைய மகிமைக்கு உகந்த காரியமாக இருந்திருக்காது.

வேதாகமத்தை நீங்கள் வாசிக்கும் போது உலகில் நடைபெற்ற பல கெட்ட காரியங்களைப் பற்றி அதில் நீங்கள் காண முடியும். மீண்டுமாக, அந்தக் கேள்வி கேட்கப்படலாம். அத்தகைய கெட்ட செயல்கள் நடைபெற தேவன் ஏன் அனுமதித்தார்? ஆனால் மீண்டுமாக, தாங்கள் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது எனத் தீர்மானிக்கும் சுதந்திரத்தை ஆணுக்கும், பெண்ணுக்கும் அளிப்பது தேவனின் திட்டமாக இருந்தது, என்பதே பதில். நிச்சயமாக தேவனுடைய சித்தத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்ய மனிதன் தேர்ந்தெடுக்கும்போது, தேவன் மீண்டும் மீண்டுமாக வேதனைப் பட்டார். தொடர்ந்து வேதனைப்புடுகிறார் என்ற போதிலும், எதைச் செய்வது அல்லது செய்யாமலிருப்பது என்பதை முடிவு செய்ய ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் அளித்திருக்கிறார் அது நமக்களிக்கப் பட்ட சுதந்திரம்.

சூறாவளி, புயல், பூகம்பம், வெள்ளப் பெருக்கு, வறட்சி, பனி மூட்டம், நெருப்பால் சேதம், போன்ற பல கேடுகள் உலகெங்கும் தாக்கி பல அழிவுகளை உண்டாக்குகின்றன. அவைத் தாக்கும் இடங்களில் எல்லாம் மரணத்தையும் அழிவையும் உண்டாக்குகின்றன. மீண்டும், அந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்களை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? மனிதனைத் தண்டிக்கவும், அவனுக்கு இன்னல்கள் விளைவிக்கவும் தேவனே வேண்டுமென்று இப்படிப்பட்ட பயங்கர காரியங்களை அனுப்புவது போல பேசப்படுகிறது. இப்படியான செயல்களால் மனிதனுக்குத் தீங்கு செய்வதில் தேவன் இன்பம் காணுவதாகக் கூட எண்ணப்படுகிறது. ஆனால் மனுக்குலத்தில் இத்தகைய நாச செயல்களை நேரிடையாக தேவன் அனுப்புவதில்லை. இயற்கை விதிகளை தேவன் ஒழுங்காக நியமித்திருப்பது உண்மையே. உலகின் ஒரு பகுதியில் சீதோஷ்ண நிலையின் மாற்றம் மையம் கொள்ளும் போது புயல், மழை போன்றவை அங்கு ஏற்பட்டு, விளைவாக வெள்ளம், குளிர் சீதோஷ்ண நிலையின் காரணமாக பனிக்கட்டி வெள்ளம், மழையின்மையால் வறட்சி, அதன் காரணாக நெருப்பு, பூமியின் அசைவால் ஏற்படும் பூமி அதிர்ச்சி போன்ற பல விளைவுகளை உண்டாக்குகின்றன.

இப்போது குன்றுகள் மலைப்பிரதேசங்களிலுள்ள மரங்கள் பலவற்றை மனிதன் வெட்டாமலிருந்தால் வெள்ளம் போன்ற அபாயத்தைத் தவிர்த்திருக்க முடியும். மேலும், வெள்ளம், நெருப்பு அல்லது இது போன்றவை அதிகமாகப் பாதிக்காத இடங்களில் மனிதன் வசிப்பதற்குத் தேர்ந்தெடுத்திருப்பான்.

மறுபுறம், நல்ல சீதோஷ்ண நிலைக்காக, நல்ல விளைச்சலைத் தரும் மழைக்காக, குடிக்கப் பயன்படத் தேங்கியிருக்கும் தண்ணீருக்காக ஒளிதரும் மின்சாரத்திற்காக, இன்னும் நாம் அனுபவித்து வரும் எல்லா பிற தேவைகளுக்காகவும், நம்மில் எத்தனை பேர் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோம்? நமக்குப் பாதகமான காரியங்களுக்கு மட்டும் தேவன் மேல் பழி சுமத்த நாம் விரும்புவதையே இது காட்டுகிறது. ஆனால் நல்லவைகளைப் பெறும் போது அவற்றிற்குரிய நன்றியை தேவனுக்குச் செலுத்த நாம் தவறி விடுகிறோம்.

ஒரு வேலையின்றி இருப்பதற்காகவோ, அல்லது வேலையை இழந்து போனதிற்காகவோ, உடல் நலம் பாதிப்பிற்காகவோ, விபத்துக்களுக்காகவோ, குடும்பத்தில் ஏற்படும் மரணங்களுக்காகவோ, இன்னும் இதுபோன்ற எண்ணற்ற செயல்களுக்காக நாம் அடிக்கடி தேவன் மேல் பழி சுமத்தி குற்றஞ் செய்கிறவர்களாக இருக்கிறோம். இச்செயல்களை அனுபவிக்கிறவர்கள் தான் பொதுவாக இவைகளுக்குப் பொறுப்புமாவர். சிலருக்கு வேலை கிடைப்பதில்லை, ஏனெனில் அவ்வேலைக்குத் தேவையான கல்வித்தகுதியைப் பெற்றிருக்கக மாட்டார்கள் அல்லது அந்தக் குறிப்பிட்ட வேலைக்குத் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். சிலர் சோம்பேறிகளாகவோ

அல்லது திறமையற்றவர்களாகவோ இருந்து தங்கள் வேலைகளை இழந்து போகின்றனர். தங்களுடைய ஒழுக்கக் கேட்டால் சிலர் நோய்வாய்ப்படுகின்றனர். இன்னும் சிலர் தங்கள் உடல் நலத்தைப் பேணாத காரணத்தால் சிறு வயதிலேயே மடிந்து போகின்றனர். ஆனால் மற்றவர்கள் மூப்பின் காரணமாகவும், வாழ்க்கையைப் பாதுகாக்கும் இயற்கையின் விதிகளின்படியும் மரணமடைகின்றனர். குடித்து விட்டுத் தள்ளாடி, சாலைகளில் சாவை சந்திப்பவர்கள் சிலர், அல்லது வாகனங்களை அதிவேகமாக ஓட்டி விபத்துகளில் மரணத்தைத் தழுவுகிறவர்கள் வேறுசிலர். இவ்வாறாக, பட்டியல் நீண்டு கொண்டு போகிறது.

உண்மையில், வாழ்வில் கெட்டது எதுவும் நடைபெறாமல், நல்லது மட்டுமே நடக்க வேண்டும் என்பதையே மக்கள் விரும்புகின்றனர். அதன் காரியமாக, கர்த்தர் அதற்கு வழி வகுத்துள்ளார். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார், மனிதர்கள் மத்தியில் வாழ்ந்தார், மனிதர்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாக சிலுவையில் மரித்தார். வேறு விதமாகச் சொன்னால் மனிதன் இவ்வுலகில் இரட்சிக்கப்படவும், இவ்வாழ்வின் மிக நல்லவைகளை அனுபவிக்கவும் அதன் பின்னர், மாம்ச மரணத்திற்குப் பின் பரலோகத்திற்குச் சென்று கர்த்தரோடு சதாகாலமும் ஜீவிக்கவும் அவர் மரித்தார். இரண்டு உலகங்களிலும் - இந்த உலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் நல்லவற்றை நீங்கள் விரும்பினால் அதற்காக இதோ இங்கு ஒரு சந்தர்ப்பம் உள்ளது. ஆனால் மீண்டுமாக அதை ஏற்றுக் கொள்ள கர்த்தர் உங்களை வற்புறுத்தப் போவதில்லை. அவர் அளிக்கவிருப்பதை ஏற்றுக் கொள்வதற்கோ அல்லது ஒதுக்கித் தள்ளுவதற்கோ உள்ள சுதந்தரத்தை அவரவர்களுக்கு அளித்திருக்கிறார் என்ற போதிலும், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் அவருடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளாவிட்டால் இதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டி வரும். (மத்தேயு 25:46)

உங்கள் பாவங்களிலிருந்து நீங்கள் இரட்சிப்படைய வேண்டுமா? தேவனையும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற்றால் அது சாத்தியமாகும். (எபிரேயர் 11:6; லூக்கா13:3; ரோமர் 10:10; மாற்கு 16:16) ஒரு முறை நீங்கள் இப்படிச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். தொடர்ந்து விசுவாசமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை நீங்கள் வாழ்ந்தால், நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையை நீங்கள் அடைவீர்கள் (வெளி. 22:14; வெளி2:10) அது உங்கள் கையில் தான் உள்ளது. ஆகையால் தேவன் மேல் பழி சுமத்தாதீர்கள்.

**தமிழில் எஸ்.எஸ். ராஜன்**

# தெரிந்து கொள்ளுங்கள்

## பழைய - புதிய ஏற்பாடுகளின் இடைக்காலம்



பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசி மல்கியா முதல் கிறிஸ்து வரைக்கும் சுமார் 400 ஆண்டு கால கட்டத்தை அறிஞர்கள் அமைதிகாலம் என்பர் (Silent). யூதர்கள் நெகேமியா, எஸ்றா போன்ற தலைவர்களுடன் பாபிலோனின் 70 காலஆண்டு சிறை இருப்புக்குப் பின் எருசலேமுக்கு திரும்பி இருந்தனர். அவர்கள் சிறையிருப்பு நாட்களில் பட்ட துன்பங்கள் அனுபவித்த அவமானங்கள் கட்டாயப்படுத்தப்பட்ட விக்கிரக ஆராதனைகள் அவர்கள் நெஞ்சில் மாறாத வடுக்களாக அமைந்தன அதன் எதிரொலியாக மிகுந்த பக்தியுடன் நியாயப்பிரமாணத்துக்குரிய தீர்க்க தரிசனத்தில் உரைக்கப்பட்ட மேசியாவை என் நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இக்கால அரசியல் உலகத்தை நாம் நோக்கினால் அசீரிய, பெர்சிய ஆட்சிக்குப்பின் மத்திய தரை நாடுகள் கிரேக்க ஆட்சியின் கீழே வந்தது (336 கி.மு). மகா அலெக்சாண்டரை (Alexander the great) நாம் அறிவோம் அல்லவா? இக்காலத்தில் உலக அரங்கில் கல்வி, கலாசாரம், வாணியம், விஞ்ஞானம், வாண சாஸ்திரம், மருத்துவம் கட்டிடக்கலை அரசியல் போன்ற துறைகள் வளர்ச்சி பெற்றது கிரேக்கத்தின் அஸ்தமன நாட்களில் மெக்கபியன் (Maccabean) என்ற மிகப்பெரிய அரசியல் கலகம் யூதர்களின் தாய் நாட்டுப் போராட்டம் ஏற்பட்டது (கி.மு. 168). இக்கால வரலாற்றை கத்தோலிக்கர் தங்கள் பழைய ஏற்பாடு புத்தகத்தில் இணைத்துக்கொண்டுள்ளனர் (Apocrypha).

கிரேக்கப் பேரரசை ரோமர் ஒடுக்கி உலக ஆட்சியை நிறுவினர் (கி.மு. 146). ரோமர்கள் பெரும் தீனிக்காரர்களும், போர்குணமுடையவர் களாகவும் இருந்தனர். அடிமைத்தன (Slavery) ஆட்சி, அடிமைத்தன அமைப்பு அவர்களுக்கு கைவந்தகலை, ஏறக்குறைய அன்றைய உலகம் சுமார் 50 விழுக்காடு அடிமை நிலையில் இருந்தது. எருசலேம் முற்றிகையிடப்பட்டு ரோமர் கைவசம் வந்தது. ஜீலியர் சிசர் (Jupius caesar) ஏரோது (Herod) அகஸ்தியஸ் (Augustus) போன்ற மன்னர்களை நாம் அறிவோம்.

இக்காலத்தில் யூதர்கள் கொத்தடிமைகளாக சொல்லொனா துன்பம் அடைந்தார்கள். 'எகோவாவிற்கு' (தேவன்) பிரியமாய் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தாங்கள் படும் உபத்திரவங்களை பக்தியாகவும் 'மூடப்பழக்கங்களாகவும் பாரம்பரிய வழிபாடுகளாகவும் (Tradition) மாற்றிக் கொண்டனர். ஊருக்கு ஊர் ஜெப ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டது (Synagogue) யூதர்கள் மத்தியில் நம்பிக்கை, பக்தி சூழ்நிலை ரீதியாக பல்வேறு பிரிவினை சித்தாந்தங்கள் உண்டாயிற்று.

***- Selected***

# கிறிஸ்து நமக்காக மன்றாடுகிறார்
# Christ Intercedes for us

**John Prabhudass**



தேவன், முதல் ஐந்து நாட்களில் வெளிச்சம், ஆகாய விரிவு, வெட்டாந்தரை, சூரியன், சந்திரன், ஆகாயத்து பறவைகள் நீர்வாழ்மச்சங்கள் ஆகியவைகளை உண்டாக்கி ஆறாம் நாள் மனிதனைப் படைத்தார். (ஆதியாகமம் 1:1-31) அவன் தனியாயிருப்பது நல்லதல்ல வென்று, அவனுக்கு ஒரு துணையை உண்டாக்கினார். ஆதாம் அவளுக்கு ஏவாள் என்று பெயரிட்டான். (ஆதியாகமம் 3 : 20). இவர்களை பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று தேவன் கட்டளையிட்டார். (ஆதியாகமம் 9 : 7).

இவ்வாறு பலுகிப் பெருகும்போது, பாவமும் அவர்களோடு சேர்ந்து பெருகினது. முதலில் புசிக்க வேண்டாம் என்று சொன்ன கனியை புசித்ததினால் ஏவாள் பாவம் செய்தாள். அந்தக் கனியை தன் கணவன் ஆதாமுக்கும் கொடுத்தப்படியால் அவனும் புசித்து பாவம் செய்தான் (ஆதியாகமம் 3 : 6-7) இங்கு தேவனுடைய சொல்லை மீறியதால் பாவம் செய்தார்கள். (ஆதியாகமம் 4 : 8) மனித இனத்தினுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்று கர்த்தர் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார். (ஆதியாகமம் 6 : 5-6).

இன்று உலகில் இருக்கும் அனைவரும் ஆதாம் ஏவாளினுடைய வம்சாவழியில் வந்தவர்களே. தேவன் இவர்களுடைய பாவங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு தனது ஒரே குமாரன் இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். தேவன் தாம் உண்டாக்கின மனித இனத்தின் மேல் அன்பும், இரக்கமும் உடையவரானதால் தனது குமாரனை விசுவாசிக்கிறவன். எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். (யோவான் 3 : 16).

இப்புவிக்கு மனிதனாக வந்த இயேசுகிறிஸ்து முப்பத்தி மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்தார். அவற்றில் கடைசி மூன்றரை ஆண்டுகள் ஊழியம் செய்து அனேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். இதனால் மூர்க்கமடைந்த அன்றைய யூதர்கள் கிறிஸ்துவைப் பிடித்து சிலுவையில் அடித்துக் கொன்றார்கள். அடக்கம் பண்ணப்பட்ட இயேசு கிறிஸ்து மூன்றாம் நாள்

உயிர்த்தெழுந்தார். (லூக்கா 24 : 6). கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் நம்முடைய பாவங்கள் கழுவப்படுகிறது. நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும் இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபிரேயர் 9 : 22) கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். ( 2 யோவான் 9).

அவருடைய உபதேசம் என்ன? பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். (மாற்கு 16 :15) "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் செய்வீர்களானால் என்சினேகிதராயுருப்பீர்கள்" (யோவான் 15 : 14). "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார்" (யோவான் 8 : 24). மனம் திரும்புதலானது எல்லா தீய செயல்களையும், கெட்ட சிந்தனைகளையும் விட்டு எப்பொழுதும் தேவனை நினைத்துக் கொண்டிருப்பதாகும். "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" (லூக்கா 13 : 3). அவர் மேல் உள்ள விசுவாசத்தை அறிக்கை செய்ய வேண்டும். "என்னவென்றால் கர்த்தராகிய இயேசுவை நீ உன்வாயினாலே அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10 : 9). பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப்போஸ்தயர் 2 : 38). மேற்கூறிய ஐந்து காரியங்களையும் உங்கள் வாழ்க்கையில் செய்யும் பொழுது நீங்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாவீர்கள்.

இரட்சிக்கப்பட்டு அவருடைய பிள்ளைகளாகிய பிறகு நாம் பாவம் செய்யக்கூடாது. அப்படி மீறி பாவம் செய்யும்போது நம்மீது கரிசனை கொண்ட நமதுஆண்டவர் நம் பாவங்களுக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். "என் பிள்ளைகளே நீங்கள் பாவம் செய்யாதப்படிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவரா யிருக்கிறார்"( 1 யோவான் 2 : 1). அவர் நாம் செய்யும் பாவங்களுக்காக பரிந்து பேசுகிறாரென்று தொடர்ந்து பாவம் செய்கிறவர்களாயும் இருக்கக்கூடாது. 'உங்களை அறியேன் என்றும் சொல்லுவார்' அதையும் நான் நினைவுகூர வேண்டும்.


சிலர் அவர்கொடுத்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல், உலகப்பிரகாரமான காரியங்களுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவை வணங்குகிறேன் என்று சொல்லுவார்கள். இப்படிபட்டவர்கள் மேல் அவர் பிரியப்படுவதில்லை. இப்படி பட்டவர்களை குறித்து கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களை செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது அவர் நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச்செய்கைக்காரரே என்னை விட்டு அகன்றுப் போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் என்கிறார்.

அன்பான நண்பா! நீ ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்ந்து பாவம் செய்திருக்கலாம். இனி பாவம் செய்யாதே. உனக்காக பரிந்து பேசும் ஆண்டவர் ஒருவர் இருக்கிறார். நீ பாவத்திற்கு எதிர்த்து போராடு சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிறபலியாயிருக்கிறார். ஒரு வேளை நீ புறமதஸ்தவராயிருக்கலாம் பரவாயில்லை, உன் பாவத்தை போக்கவே வந்தார். இன்று அவரை நீ விசுவாசித்தால் உன் பாவம் கழுவப்படும். மேலும் வேதாகமத்தை அறிந்து நமக்காக பரிந்து பேசும் ஆண்டவர் இயேசுவுக்கே உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## வேத அறிவுப் போட்டி எண் 2ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தோமா | – | யோவா. 20:28 |
| 2. | சபிக்கப்பட்டவன் | – | மல். 1:14 |
| 3. | பொய்களினாலும் வஞ்சகத்தினாலும் | – | ஓசி. 11:12 |
| 4. | யோனா | – | யோனா. 4:6 |
| 5. | அந்தியோகியா | – | அப். 11:27 |
| 6. | தேவனுக்குமுன் | – | சங். 68:2 |
| 7. | சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து | – | யாக். 1:17 |
| 8. | ஏசாயா | – | ஏசா. 65:9 |
| 9. | உக்கிரகோபாக்கினை | – | ரோ. 2:8 |
| 10 | உகந்தவர்களாக்கமாட்டாது | – | I கொ. 8:8 |



## வேத அறிவுப்போட்டி எண் 2ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. கிறிஸ்டோபர் - வத்தலக்குண்டு
2. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. V. கோவலன் - மதுரை
4. J. நிர்மலா ஜான் - மதுரை
5. S. வைலட் மெர்ஸி - வத்தலக்குண்டு
6. N. ஜேக்கப் - கும்மிடிப் பூண்டி
7. D. ரூத்மேரி - தேவம்பேடு
8. A. ராபர்ட்கிளைவ் - அதிகாரிபட்டி
9. L. மனாசே - யாடாமாரி (A.P)
10. N. கமலவேணிகன்னையன் - சென்னை
11. A. மேரியம்மாள் - வத்தலக்குண்டு
12. M. நோயல்ராஜன் - சேலம்
13. V. ரவிமோகன்ராஜ் - குளத்தூர்
14. A. கந்தசாமி - தெக்கலூர்
15. R. பெரியசாமி - சேளூர்
16. M. ரோஸ்மேரி - சென்னை
17. S. கிறிஸ்டியான் - சென்னை
18. Mr. தங்கமுத்து - சென்னை
19. A. ஜோதிகாந்தம் - பாண்டியநல்லூர்
20. A. மைக்கேல் ராஜ்குமார் - திண்டுக்கல்

பெண்கள் பகுதி

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

# *Is a woman required to cover her Head while praying?*

**Betty Burton Choate**



'ஸ்திரீயானவள் ஜெபம் பண்ணுகிறபோதும், ஆராதனை செய்யும்போதும் அவளது தலையை துணியால் அல்லது முக்காட்டினால் மூடிக்கொள்ள வேண்டியது. அவசியம் என அநேகர் கூறுகின்றனர். சிலர் இது அவசியமல்ல என்றும் கூறுகின்றனர். இது 1 கொரிந்தியர் 11 : 3-16ல் கூறப்பட்டுள்ள, தலையை மூடிக்கொள்வது பற்றிய கருத்தைத் தவறாகப் புரிந்துகொண்டதிலிருந்தும் தவறான மொழிபெயர்ப்பிலிருந்தும் ஏற்பட்ட குழப்பமே ஆகும்.

"ஆனால் ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக் கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

❍ இப்பகுதியின் ஆரம்பத்தில், பவுல் அதிகாரத்தைப் பற்றிய கருத்தை முதலாவது வலியுறுத்துகிறார். நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்படுத்தும் கருத்தை விளக்குகின்றபோது, தலையை மூடிக்கொள்ளுகிற இந்த தர்க்கமானது இரண்டாவது காரியமேயாகும். தேவனுடைய திட்டத்தில் சரீரத்தலையானது. வெளிப்படையான ஒன்று, இது ஆவிக்குரிய தலைக்குக் கனத்தை அல்லது கனவீனத்தைக் கொண்டு வரக்கூடியது. இவ்வாறாக, ஒரு மனிதனின் தலை மூடப்பட்டிருக்கும் போது ஆவிக்குரிய தலையாகிய கிறிஸ்துவை கனவீனப்படுத்துகிறது. அடுத்தபடியாக, தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற ஒரு ஸ்திரீயானவள் அவளது தலையை, அவளது புருஷனை கனவீனப்படுத்துகிறாள்.

❍ இப்பகுதி நமக்கு எதைப் போதித்த போதிலும், தேவன் ஏற்படுத்தியிருக்கிற அதிகார ஒழுங்கின் உண்மைத் தன்மையினைக் காண நாம் தவறிவிடக்கூடாது. நாம் உண்மையிலேயே எந்த விதமான

மூடிக்கொள்ளுதலைப் பற்றிய தர்க்கம் என்ற கேள்வியை விவாதத்தில் எழுப்பலாம்; மேலும் நிச்சயமாக தேவன் இவ்விஷயத்தில் நம்மை மன்னிப்பார் என நினைத்து நேர்மையாகவோ, உண்மையாகவோ தவறான முடிவுக்கு வரலாம். ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் கிறிஸ்துவுக்கு தலையாயிருக்கிறார் என்ற தெளிவான போதனையை நாம் இழந்து விட முடியாது. ஏனெனில் இது தேவனுடைய மிக ஆழமான திட்டத்தின் உண்மைத்தன்மையை அசட்டை செய்வதற்கும் எதிர்ப்பதற்கும் வழிவகுத்து விடும். *- தொடரும்*

**தமிழில் : J. குளோரி அர்ஜுனன்**


# ஒரு வழி

# தேவ வார்த்தையின் நிறைவு

# Finality of God's Word

**பாடம்–6**

***- Roger Dickson***




தேவன் பழைய ஏற்பாட்டின் கட்டளையை யூதர்களுக்குக் கொடுத்த போது, அவரது கட்டளையோடு ஒன்றை கூட்டுவதைத் குறித்து அவர்க்ளை அவர் எச்சரித்தார். அவர், "நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும் படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்." *(உபா.4:2)* என எச்சரித்தார். இது கண்டிப்பான எச்சரிப்பாகவும், இன்றும் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகவும் இருக்கிறது வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகமானது மனிதனுக்கு தேவனது நிறைவான (பூரணமான) வெளிப்பாடாகும். தேவன் அவரது வார்த்தையோடு எதையும் கூட்டக்கூடாது என மனிதனை எச்சரிக்கிறதை இந்த புஸ்தகத்தின் கடைசி வசனங்களில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வெளிப்படுத்தின விசேஷம் 22 : 18, 19

"இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: **ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன்மேல் கூட்டுவார்;** ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால், **ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்கத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார்."**

தேவன் அவரது கருத்தை அதிக தெளிவாக வெளிப்படுத்தியிருக்கவில்லை, நாம் நமக்கென்று உருவாக்கின மதக்கோட்பாடுகளை அவரது வார்த்தையோடு கண்டிப்பாக கூட்டக்கூடாது. நமது இரட்சிப்பிற்குத் தேவையானவைகளென மனிதருடைய மதப் பழக்க வழக்கங்களை நாம் கூட்டக்கூடாது. இப்படி தேவனது கட்டளையோடு கூட்டுவது அவரது கட்டளைகள் போதுமானவைகள் அல்ல எனக்கூறுவதாகும். இது, மனிதனுக்கு எது நலமானது என தீர்மானிப்பதில் தேவன் நமது உதவியை நாடுகிறார் எனக் கூறுவதாக இருக்கின்றது. ஆனால் தேவன் அவரது கட்டளைகள் "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணமாக" இருக்கிறது எனக்கூறுகிறார். (யாக். 1 : 25). மேலும் இது, "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது." (II தீமோ. 3:16, 17). தேவனது கட்டளை குறைவற்றதாகவும், பூரணமானதாகவும் இருக்கிறபடியினால், பிறகு அதனோடே எதையாவது கூட்டுவது நமக்கு அவசியம் எனக்கூறுகிறதற்கு நாம் யார்?

**தற்சோதனை**

1. ______ தேவன் அவரது வார்த்தை நிறைவானது எனக்கூறுகிறார் என்றால், பின் நாம் எதை ஏற்றுக்கொள்வது? (A) இது போதுமானது (B) இது நிறைவற்றது (C) நாம் நமது விதிகளைக் கூட்ட வேண்டும்.

2. ______ தேவனுடைய வெளிப்பாட்டோடு மதக்கோட்பாடுகளைக் கூட்டுகிறவர்களுக்கு தேவன் எதைக் கூட்டுவார் என்க்கூறினார்? (A) நம்பிக்கையை (B) வாதைகளை (C) வேதனையை

3. ______ சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமானத்தைப் பற்றி குறிப்பிடும் போது தேவன் அவரது கட்டளை எப்படிப்பட்டதாக இருந்தது எனக்கூறினார்? (A) நிறைவற்றதாக (B) குறைவற்றதாக (C) பூரணமானதாக

4. ______ நமது இரட்சிப்பையும், ஊழியத்தையும் பற்றி குறிப்பிடுவதால் தேவனுடைய வார்த்தை என்னவாயிருக்கிறது? (A) போதுமானதாக (B) நிறைவற்றதாக (C) பூர்த்தி செய்யப்படாத ஒன்றாக.

5. ______ இதைப் படிக்கிறவர்களுக்குள்ளும், நம்புகிறவர்களுக்குள்ளும் தேவனுடைய வார்த்தை என்ன செய்கிறது? (A) கிரியை செய்கிறது (B) ஒன்றுமில்லை (C) ஏற்க மறுப்பதை உண்டாக்குகிறது

| | |
|---|---|
| ஆம் / இல்லை | நீ தேவனுடைய வார்த்தையோடு மதக் கோட்பாடுகளைக் கூட்டினால், உனது வாழ்க்கைக்குத் தேவனது கட்டளை போதுமானதாக இல்லையென நீ நினைப்பதாக இது கூறுகிறதா? |

**வேதவாசிப்பு** : கலா. 1 : 6–10


**வேதஆராய்ச்சி** : வார்த்தையோடு கூட்டாதே : நீதி. 30 : 6; 2 யோவான் 9–11; எல்லாவற்றிற்கும் போதுமான வார்த்தை : 2 தீமோ. 3 : 15–17; 2 பேது. 1 : 3,4, வளர்ச்சியை உருவாக்கிற வார்த்தை : அப். 20 : 32; 1 தெச. 2–13; 1 பேது. 2 : 3; 3 : 19, நிறைவான வெளிப்பாடு : கலா. 1 : 6–9; 2 தீமோ. 4 : 1–4; யூதா 4.

விடை 20ம் பக்கம் பார்க்கவும்

சிறுவர் பகுதி

# தானியேலின் பக்தி

வேதபகுதி : தானி. 6 : 1-28



தரியுவின் ராஜ்ஜியகாலத்தில் தானியேல் என்று அழைக்கப்பட்ட ஒரு தேவமனுஷன் இருந்தான். இவன் தரியுவின் ராஜ்யபாரத்தில் மூன்று பிரதானிகளில் ஒருவனாயிருந்தான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தபடியால் அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான். அப்பொழுது மற்ற பிரதானிகளும் தேசாதிபதிகளும் பொறாமைபட்டு தானியேலைக் குற்றப்படுத்த வகை தேடினார்கள். தானியேலிடத்திலோ யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. அந்த மனுஷர்கள் யோசனை செய்து அவனுடைய தேவனைப்பற்றிய வேதவிஷயத்திலே எப்படியாவது குற்றப்படுத்தலாம் என நினைத்து ராஜாவினிடத்தில் சென்று முப்பது நாள் வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்தத் தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி, யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கங்களின் ஜெபியிலே போடப்பட கட்டளையிட்டு அதற்குக் கையெழுத்து வைக்க வேண்டும் என்றார்கள். அப்படியே ராஜாவும் அந்தக் கட்டளைப் பத்திரத்துக்குக் கையெழுத்து போட்டான்.

தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து போடப்பட்டது என்று அறிந்தும் பயமில்லாமல் தன்னை உண்டாக்கி தேவாதி தேவனை நோக்கி தான் முன் செய்து வந்தபடியே, தினமும் மூன்று வேளையும் முழங்காற்படியிட்டு ஜெபித்து நன்றி செலுத்தி வந்தான். இதை அறிந்த அந்த பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி ராஜாவிடம் வந்து, சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் ஒருவனாகிய இந்த தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து போட்ட கட்டளையையும் மதியாமல் தினமும் மூன்று வேளை தான் பண்ணும் ஜெபத்தைப் பண்ணுகிறான் என்று குற்றப்படுத்தினார்கள். ராஜாவோ இதைக்கேட்டு மிகவும் சஞ்சலப்பட்டு தானியேலை காப்பாற்றும்படி சூரியன் அஸ்தமிக்கும் மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அந்த குள்ள நரி மனிதர்களோ விட்டபாடில்லை ராஜாவிடம் கூட்டமாய் வந்து ராஜாவே கட்டளையிட்டதாக்கீது மாற்றப்படக்கூடாது என்று கூக்குரலிட்டனர். பின்பு ராஜா கட்டளையிட தானியேலை கொண்டு சென்று சிங்கங்களின் கெபியில் இறை போடுவதைப் போல தானியேலை போட்டார்கள். அப்பொழுது ராஜா நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான் பின்பு கெபியின் வாசலில் ஒரு கல்லை வைத்து அடைத்து அதின் மேல் முத்திரை போட்டார்கள்.

தரியு ராஜாவோ தன் அரண்மனைக்கு சென்று இரா முழுவதும் போஜனம் பண்ணாமலும் கீதவாத்தியம் முதலானவைகளை கேட்காமலும் தூங்காமலும் இருந்தான், ராஜாவுக்கு தானியேலின் மீது எவ்வளவு பாசம் பார்த்தீர்களா ? தானியேல் தரியுவின் ராஜ்யபாரத்தில் உண்மையும் உத்தமமும் உள்ளவனாயிருந்தான். ராஜா காலமே கிழக்கு வெளுக்கும் போது எழுந்திருந்து சிங்கங்களின் கெபிக்கு வந்து துயரசத்தமாய் தானியேலே நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்கு தப்புவிக்க வல்லவராயிருந்தாரா! என்றான். தானியேல் உடனே ராஜாவே நீர் என்றும் வாழ்க ! சிங்கங்கள் என்னைக் கடிக்காதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார் என்றான், ராஜாவுக்கோ ஒரே சந்தோஷம்.

தானியேலின் மீது குற்றஞ்சாற்றின மனுஷரை ராஜா கொண்டு வரச்சொல்லி அவர்களையும் அவர்கள் குடும்பத்தாரையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். சிங்கங்கள் அவர்களை நொறுக்கிப் போட்டது. பின்பு ராஜா தன் ராஜ்யம் எங்கும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டும். அவர் ஜீவனுள்ள தேவன். அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். அவருடைய ராஜ்யம் அழியாதது, அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும், அவரே இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதி அவருடைய நாமத்தை பறைசாற்றுவித்தான்.

தேவ மனுஷனாகிய தானியேலின் பக்தியை பார்த்தீர்களா ? நீங்களும் நானும் இந்த தானியேலைப் போல இடைவிடாது ஜெபித்து தேவனை ஆராதித்து வந்தால் இந்த தானியேலைப் போல நாமும் பொல்லாதவர்களிடமிருந்தும் கொடூரமான விலங்குகளிடமிருந்தும் காப்பாற்றப்படுவோம். தானியேலைக் காப்பாற்றிய தேவன் இன்றும் ஜீவிக்கிறார் நம்மையும் காப்பாற்றுவார்.

*– B. அர்ஜுனன்*

***மனப்பாட வசனம் :***

"இடை விடாமல் ஜெபம் பண்ணுங்கள்.." *(I தெசலோனிக்கேயர் 5:17)*

# திருமணமும் குடும்ப வாழ்க்கையும்

1. ஆதியிலே திருமணம் என்கிற பரிசுத்தமான ஓர் ஒப்பந்தத்தை கொடுத்தவர் தேவன்
-ஆதாமுக்கு ஏவாளை கொடுத்த தெவன், "இருவரும் ஒரே மாமிசமாய் இருப்பார்கள்" என்று கூறினார் (ஆதி 2:24.)

2 கணவன் மனைவி, இருவருமாய் தாங்கள் உயிருள்ள நாட்கள் மட்டும் அன்போடு ஒன்று சேர்ந்து வாழ்வது தேவனுடைய திட்டமாய் இருக்கிறது. (1கொரி7:31, ரோம 7:2).

3. விவாகரத்து, மறுமணம், இவை இரண்டையும் தேவன் தீர்மானிக்கவில்லை.
இயேசு சொன்னார், "தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மத். 19:4-6)
"புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு விவாகம் பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்" (ரோமர் 7:3).
"வேசித்தனஞ்செய்ததினிமித்தமே அன்றி" விவாகரத்து கூடாது. (மத். 19:9)

4. மகிழ்ச்சியாய் தேவனுடைய தீர்மாத்தின்படி வாழும்போது, மகிழ்ச்சியும், சந்தோஷமும் உண்டாகும், விவாகரத்தின் எண்ணம் தோன்றாது.

மனைவி கணவனை தன் தலை போல் எண்ணவேண்டும் (எபே 5:22-23)
கணவன் மனைவியை தன்னைபோல நேசிக்கவேண்டும் (எபே.5:28-33)
கணவன், மனைவி ஆகிய இருவரும், தங்களை குடும்ப வாழ்க்கையின் உடன் சுதந்திரவாதிகளாக கருதவேண்டும்; இருவரும் தங்களுக்குள் இணங்கி ஒருவர் மற்றவரின் தேவைகளுக்கு மதிப்பு தருதல் வேண்டும். (1பேது. 3:7)
தங்கள் திருமணவாழ்வில், வேசித்தனம் இராதபடி வாழவேண்டும். (1கொரி. 7:2)
ஒருவர் மற்றவர்களுக்காக, தன்னலம் கருதாமல், அன்போடு இரக்கமாய், ஒருவரை ஒருவர் மன்னித்து வாழவேண்டும். (மத். 7:12 பிலி. 2:5; எபே. 4:32).
தங்களுடைய பிள்ளைகளை தேவனுக்கு பயந்து, மற்றவர்களை மதித்து வாழும்படி, அவர்களை வளர்க்க வேண்டும். (எபே. 6:1 கொலே. 3:20-21)



இதுவே மகிழ்ச்சியும் தேவனுக்கு மகிமையான குடும்பமும் ஆகும்.

# தேவன் ஞானஸ் நானத்தை எங்கே வைத்திருக்கிறார்

ஞானஸ்நானம்

## ஞானஸ் நானத்திற்குமுன்

| | |
|---|---|
| குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டவன் ....... | ரோ. 3 : 10, 23 |
| பாவத்தில் மரித்தவன் ....... | எபே. 2:1 |
| தேவனற்றவனும் நம்பிக்கையற்றவனும் ....... | எபே. 2 :12 |

**பாவியானவன் செய்ய வேண்டியவை . . .**

| | |
|---|---|
| சுவிசேஷத்தை கேள் ....... | ரோ. 10 : 17 |
| கிறிஸ்துவை விசுவாசி ....... | யோ. 8 : 24 |
| பாவத்திற்கு மனந்திரும்பு ....... | லூக். 13 : 35 |
| கிறிஸ்துவுக்குள் பிரவேசி இதன் மூலம் | ⟶ |

தேவனுடைய ஆலோசனையை
புறம்பே தள்ளாதே
*லூக். 7 : 30*

## ஞானஸ் நானத்திற்குபின்

| | |
|---|---|
| இரட்சிப்பு ....... | மாற். 16 : 16 |
| பாவத்திலிருந்து விடுதலை ....... | அப். 2 : 38 |
| பாவம் கழுவப்படுதல் ....... | அப். 22 : 16 |
| கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகுதல் ....... | கலா. 3 : 37 |
| ஒரு சரீரத்திற்குள்ளாகுதல் ....... | I. கொ. 12 : 13 |
| அவருடைய மரணத்திற்குள்ளாகுதல் ....... | ரோ. 6 : 34 |
| புதிய ஜீவியம் ....... | ரோ. 6 : 4 |
| ஆவி புதுப்பிக்கப்படுதல் ....... | தீத். 3 : 5 |
| இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது ....... | I. பேது. 3 : 21 |

"அவருடைய வார்த்தையை
சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்"
அப். 2 : 41.

**Dillard Thurman**

பொருள் : மெய்யான ஐக்கியம் செயலில் காட்டப்பட வேண்டும்
ஆக்கியோன் : பவுல்
காலம் : 61-62 கி.பி.

**திட்டவரைக் குறிப்பு :**

A. பிலேமோனுக்கு வாழ்த்தும் புகழுரை 1- 7

B. ஒநேசிமுக்காக பவுலின் மன்றாட்டு 8 - 21

C. உற்சாகமான முடிவுரை 22- 25

**சிறப்புச் செய்தி :**

***கிறிஸ்துவுக்குள் ஆண்டான் அடிமை என்ற பேச்சுக்கே இடமில்லை ஒநேசிமு என்ற அடிமை, ஓடிப்போன பழைய திருடன் ஆனால்***
***இன்று மனம் மாறிய கிறிஸ்தவன், பிலேமோனின் ஆவிக்குரிய சகோதரன்***

**வரலாற்று பின்னணி :**

முதலாளியும் எசமானும் அடிமையும் கிறிஸ்தவர்களாக இருக்கக் கூடாதா? தாரளமாக இருக்கலாம். ஆனால், தொழிலாளி அல்லது அடிமை திருடனாகவும் ஏமாற்றுகிறவனாகவும் இ.ருந்தால் எந்த முதலாளிதான் பொறுத்துக் கொள்வான்? அக்காலத்தில் அப்படிப்பட்டவர்களுக்கு மரண தண்டனை கொடுத்து வந்தார்கள். கிறிஸ்துவின் உபதேசம் யாவருக்கும் உரியது. ஒநேசிமு என்ற ஓடிப்போன திருடனான அடிமை தேவனுடைய கிருபையால் குணமாக்கப்பட்டான். பவுல் அவனை வழி நடத்தினான். அதன்பின்பு ஒநேசிமு அன்பும், பண்பும் பாசமும் உடையவனாகி பணிவிடை செய்தான். ஒநேசிமுவை அவன் பழைய ஏசமானும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனுமாகிய பிலேமோனுக்கு அறிமுக கடிதம் கொடுத்து பவுல் அனுப்பினான். பவுல் சிறையிலிருந்து இந்நிருபத்தை எழுதினான்..

***– Selected***

**ஒரு வழி**
**பாடம் 6ன் விடை 1.A, 2.B, 3.B, 4.A**

**ஜெபியுங்கள்**

1. நமது நாட்டின் அதிகாரங்களுக்காக
2. மாவட்டங்கள் தோறும் நமது மாத இதழ் கருத்தரங்க கூட்டங்கள் நடைபெற
3. அனைத்து நோயாளிகளுக்காக

## வேத அறிவுப் போட்டி எண். 3

குறிப்பு :

வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் மட்டுமே விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதவும். விடைகள் இம்மாத இறுதிக்குள் வந்து சேரும்படி அனுப்புங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.


1. தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம் என்ற அப்போஸ்தலன் யார்?
2. நற்செய்தி எவைகளைப் புஷ்டியாக்கும்?
3. யாருடைய குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று கர்த்தர் ஆணையிட்டிருக்கிறேன் என்றார்?
4. அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதின ராஜா யார்?
5. நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை எப்படி எண்ணவேண்டும்?
6. ஒரு தாற்றுக்கோலால் பெலிஸ்தரில் அறு நூறுபேரை முறியடித்தவன் யார்?
7. நீதியைச் செய்கிறவனெவனும் யாரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்?
8. நீர் உம்மைத்தாமே எனக்குக் கடனாகச் செலுத்த வேண்டுமென்று யார் யாருக்கு எழுதுவது?
9. வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும் எதுவும், எதுவும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்?
10. தொல்லையின் திரட்சினால் எது பிறக்கும்?

## நடப்பு செய்திகள்

1. *போலீசாருக்கு சிறந்த பயிற்சிகளை அளிக்க 37 கோடி ரூபாய் செலவில் போலீஸ் அகடமி அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.*
2. *பிரதமர் வாஜ்பாய் அமெரிக்க பார்லிமென்டில் ஆற்றிய உரை அனைத்து மொழிகளிலும் வெளியிடப்பட உள்ளது.*
3. *குறைபாடுள்ள மீட்டரை ஐநூறு ரூபாய் செலுத்தி பொது மக்கள் மாற்றிக்கொள்ளலாம் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது.*
4. *உத்திரப்பிரதேசத்தில் புதிய மாநிலமான 'உத்தராஞ்சல்' என்ற மாநிலம் அமைக்க உ.பி, அரசு ரூ. 39 கோடியை ஒதுக்கியிருக்கிறது.*
5. *சிட்னி ஒலிம்பிக் ரோயிங் (துடுப்பு படகு) போட்டியில் பிரிட்டன் வீரர் ஸ்டீபன் ரெட்கிரேவ் (38 வயது) ஐந்தாவது தங்கப்பதக்கத்தை வென்று சாதனைபடைத்துள்ளார். இவர்கடந்த 1984 முதல் இவர் ஐந்து ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்று வருகிறார்.*

Printed by V.D. Thankachan and published and owned by B. Arjunan and printed at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001. and Published from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. **Editor B. Arjunan.**

*எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.*



**ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி**

**வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி**

**All are Welcome**

**கிறிஸ்துவின் சபை**
**17.2.102-D/5, ராஜன் நகர்**
**வத்தலக்குண்டு – 624 202.**
**திண்டுக்கல் மாவட்டம்**
**✆ : (04543) 23278**

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**

# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 p.m 8.00 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday,<br>Tuesday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.30 p.m 5.45 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 p.m 2.00 p.m | 3/5, 7th A Main, Tatasilk Farm<br>Bangalore - 560028 | ROBERT<br>RATHNAKAR |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST